**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,ஆண்டிபட்டி.**

முன்னிலை: சி.ராஜேஷ், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆண்டிபட்டி.
2021ம் வருடம் நவம்பர் மாதம் 23-ம் நாள் செவ்வாய்கிழமை

**ஐ.ஏ.எண்.02/2021**
**-இன்-**
**அசல் வழக்கு எண்.7/2021**

**CNR No:TNTH140001062020**

தங்கவேல் ...மனுதாரர்/வாதி

-எதிர்-

1. மாணிக்கம்
2. பொன்னம்மாள்
3. பாண்டி
4. சூரியா
5. வட்டாட்சியர் அவர்கள், ஆண்டிபட்டி.
6. சார்பு ஆய்வாளர் அவர்கள், இராஜதானி
   காவல் நிலையம், இராஜதானி.
7. மாவட்ட ஆட்சியர் அவர்கள், தேனி.
8. காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள்,
   மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம்,
   தேனி. ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 28.10.2021 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.அம்சமணி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/1 முல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.மகேந்திரன் அவர்கள் ஆஜராகியும், 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள்/5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.V.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இது நாள்வரை என் பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**உத்தரவு**

அசல் வழக்கில் ஆணையர் நியமனம் செய்ய கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 26 விதி 9-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1) மனுதாரர் வழக்கில் வாதி. மனுதாரரால் தாவா சொத்து சம்மந்தமாக நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை 80 ஆண்டுகளுக்கு மேலாக மனுதாரரின் தாத்தா அனுபவம் செய்து வந்து அதன்பிறகு 10.04.1994ம் தேதி பாக விஸ்தி ஏற்பட்டு தாவா சர்வே எண்ணில் 21 1/2 செண்டு மனுதாரருக்கும் அதற்கு வடபுரம் உள்ள 21 1/2 செண்டு மனுதாரரின் சகோதரர் மாணிக்கத்திற்கும் வாய்மொழியாக பாகம் கிடைத்ததது. மாணிக்கதற்கு கிடைத்த 21 1/2 செண்டு அவர் இறந்த பிறகு அவரது மகனான முருகேசன் என்பவரிடமிருந்து வாய்மொழியாக மனுதாரர் கிரையம் பெற்று தற்போது 43 செண்டு நிலத்தை அனுபவம் செய்து வருகிறார். தாவா சர்வே எண்ணில் உள்ள கிணற்றில் மனுதாரருக்கு சரிபாகம் உள்ளது. அந்த கிணற்றிலிருந்து தாவா சொத்திற்கும் இதர சொத்திற்கும் பூமிக்கு அடியில் பைப் லையன் அமைத்து சாகுபடி செய்து வருகிறார். தாவா சொத்தை பொறுத்து மனுதாரருக்கு பங்காளி முறையுள்ள மாணிக்கம் மகன் மாணிக்கம் பெயரில் தவறுதலாக ஏற்பட்டுள்ள பட்டாவை வைத்து கொண்டு 13.10.2020ம் தேதி நில அளவை செய்யபோவதாக 09.10.2020ம் தேதி மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்படி 13.10.2020ம் தேதி நிலஅளவையர், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் இராஜதானி காவல் நிலைய அதிகாரி ஆகியோர் அளவை செய்ய முற்பட்டனர். அதற்கு மனுதாரர் ஆட்சேபனை தெரிவித்துள்ளார். தாவா சொத்தில் மனுதாரர் அனுபவம் செய்வதற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்து வருவதால் தாவா சொத்தை அளந்து அத்துமால் பார்க்கவும், நிலத்தின் அமைப்பை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யவும் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:</u>

2) இம்மனு நிலைக்கக்கூடியதல்ல. பிராது சொத்து அரசு தரிசு நிலமாக இருந்ததை 1ம்பிரதிவாதியின் தந்தை மாணிக்கம் அவர்களின் தந்தை மாணிக்கம் அவர்கள் கடந்த 1950ம் ஆண்டு கையகப்படுத்தி விவசாயத்திற்கு ஏற்ற வகையில் பயன்படுத்தி நீண்ட நெடுங்காலமாக அவரது உடமையில் வைத்து அனுபவித்து வந்து, இறந்த பின்பு 1ம்பிதிவாதியின் தந்தை மாணிக்கம் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வந்ததன் அடிப்படையில் அரசால் அசைண்மெண்ட் செய்து DKT நம்பர் 1541/80ன் பிரகாரம் கடந்த 18.02.1971ம் தேதி பட்டா வழங்கியதன் அடிப்படையில் பிராது சொத்தும், சர்வே எண்.112/4ல் கட்டுப்பட்ட சொத்தும், 1ம்பிரதிவாதியின் தந்தை மாணிக்கம் அவர்களுக்கு பூரண பாத்தியம் ஏற்பட்டு பிராது சொத்திற்கு

உரிமையாளராக அவரது உடமையில் வைத்து அனுபவித்து வந்து கடந்த 1995ம் ஆண்டு இறந்துவிட்டார். மாணிக்கம் அவர்கள் இறந்த பின்பு மேற்படியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது வாரிசுகளான 1ம்பிரதிவாதியின் சகோதரர் கருப்பையா, சகோதரிகள் தெய்வகனி, ராஜம்மாள் ஆகியோர்கள் வாரிசுமுறையில் அடைந்து கூட்டாக அனுபவித்து வருகின்றனர். மாணிக்கம் அவர்களுக்கு பிராது சொத்து சுய சம்பாத்திய சொத்தாகும். மேற்படியார் அனுபவித்து வந்து இறந்த பின்பு அவரது நேரடி வாரிசுகளான 1ம்பிரதிவாதி மற்றும் அவரது உடன்பிறந்தவர்களுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதாகும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்:</u>

3) இம்மனு நிலைக்கக்கூடியதல்ல. தாவா சொத்தில் குறிப்பிடப்படும் சர்வே எண்.112/5 மற்றும் 112/4 இரண்டிற்கும் சேர்த்து நிலத்திற்கு மாணிக்கம் என்பவர் நிலத்தினை அளவீடு செய்யக்கோரி 5ம்பிரதிவாதியிடம் மனு கொடுத்ததன் அடிப்படையில் முறையாக தங்கபாண்டி, தங்கராஜ், தங்கம்மாள், குருவையா, தங்கவேல், மாணிக்கம், விஜயராஜ் ஆகியோர்களுக்கு 13.10.2020ம் தேதி அளவை பணி செய்வதாக குறிப்பிட்டு 09.10.2020ம் தேதி நோட்டிஸ் அனுப்பப்பட்டது. பின்னிட்டு கடந்த 13.10.2020ம் தேதி 5ம்பிரதிவாதியின் உத்தரவின் பேரில் சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர், 6ம்பிரதிவாதி அலுவலர்கள் ஆகியோர்களுடன் தாவா சொத்தை அளவீடு செய்ய முற்பட்டபோது, வாதி பிரச்சனைகள் செய்து அளவை பணியை தடுத்து நிறுத்திவிட்டார். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

4) இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிடப்படவில்லை.

5) இந்நிலையில் மனுதாரர் கோரியுள்ளபடி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய அனுமதிக்க இயலுமா?

6) தாவா அசல் வழக்கனாது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தை 80 ஆண்டுகளுக்கு மேலாக மனுதாரரின் முன்னோர் அனுபவம் செய்து வந்ததாகவும், அதில் தாவா சொத்தில் 21 1/2 செண்டு மனுதாரருக்கு பாகத்திலும் மற்றொரு 21 1/2 செண்டு கிரையமாகவும் பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தில் மனுதாரர் அனுபவம் செய்வதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்வதால் தாவா சொத்தில் அத்துமால் மற்றும்

அமைப்பை பொறுத்து அறிவிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டது. தாவா சொத்து 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதாகவும், அதில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையையும் இல்லை என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் ஆணையர் நியமனம் செய்ய முடியாது என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது. தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே 1ம்எதிர்மனுதாரர் தன்னிச்சையாக அளவை செய்ய முற்பட்டதாகவும் அதை தடுத்துவிட்டதாகவும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. மேலும் தாவா சொத்தில் மனுதாரர் பைப் லையன் அமைத்து சாகுபடி செய்து அனுபவம் செய்து வருவதாகவும் கூறப்பட்டது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரையை பரிசீலனை செய்து பாாக்கையில் இவ்வழக்கில் ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்து அளவை செய்யப்பட்டால் இருதரப்பிற்கும் இடையே ஆன பிரச்சனைக்கு எளிதில் தீர்வு காணமுடியும் என தெரியவருகின்றது. எனவே நீதியின் நலன் கருதி நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

வழக்கறிஞர் திரு.P.சாமிநாதன் அவர்களை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இருதரப்பிற்கும் அறிவிப்பு கொடுத்து இருதரப்பினர்கள் முன்னிலையில் தாவா சொத்தை பார்வையிட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை அளவீடு செய்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றம் வரைபடத்துடன் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையருக்கு ஊதியமாக ரூ.5000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மனுதாரர் நீதிமன்ற ஆணையர் ஊதியத்தை நேரடியாக ஆணையருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.

அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா: 20.12.2021

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2022.02.17 11:23:25 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆண்டிபட்டி.

**மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:** இல்லை

C RAJESH Digitally signed by C RAJESH Date: 2022.02.17 11:23:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஆண்டிபட்டி.